DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE FAST TRACK COURT (M.L) UTHAMAPALAYAM

Case No. STC.No.314 /2025

Deposition of DW1

| | | |
|---|---|---|
| Name | : | திரு.தொந்தியப்பன் |
| Father's / Husband Name | : | வி.ஜெயராம் |
| Village | : | தேவாரம் |
| Taluk | : | உத்தமபாளையம் |
| Calling | : | |
| Age | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd day of July 2026.

புகார்தாரர் ஆஜர் இல்லை. BNSS 279ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

<u>புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம்.ஏ.எம்.பில் படித்துள்ளேன். எனக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் சரளமாக எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். நான் இங்கு குடியிருக்கிறேன் என்றால் தற்சமயம் பாளையத்தில் குடியிருக்கிறேன். டாஸ்மாக் கடையில் எத்தனை வருடமாக வேலை பார்க்கிறேன் என்றால் 23 வருடமாக வேலை பார்க்கிறேன். நான் அரசு ஊழியர் என்றால் ஒப்பந்த ஊழியர் ஆவேன். எனக்கு மாத வருமானம் எவ்வளவு என்றால் நான் வேலைக்கு சேர்ந்த போது ஒரு மாதம் ஆயிரம் வாங்கினேன், இரண்டாவது மாதத்தில் இருந்து 2000 வாங்கினேன், 2017-2018ல் எனது வருமானமாக ரூ10,800/- ஆகும். தற்போது ரூ13,500/- எனது வருமானம் ஆகும். மேற்படி வருமானத்தை தவிர்த்து நான் வேறு வேலை பார்க்கிறேன் என்றால் ஏலக்காய் வியாபாரம் செய்கிறேன். 2016ல் இருந்து ஏலக்காய் வியாபாரம் செய்கிறேன். அதில் ஒரு மாதத்திற்கு ஒரு லட்சம் ஒரு மாதத்திற்கு 30 ஆயிரம் என வருமானம் வரும். ஏலக்காய் வியாபாரத்திற்கு ரசீது போடுவது வழக்கம் என்றால் இல்லை,

சிட்டுப்போடுவோம்.

2. நான் ஏலக்காய் தொழில் செய்வது சம்பந்தமான ஆவணங்களை தாக்கல் செய்ய தயாரா என்றால் தயார். ஏலக்காய் தொழிலுக்கு எனக்கு தனிப்பட்ட முறையில் குடோன் உள்ளதா என்றால் இல்லை. நான் சொல்வது போல் ஏலக்காய் வியாபாரம் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு தேவாரத்தில் பூர்வீக வீடு உள்ளது. அந்த வீடு எனது அப்பா பெயரில் உள்ளது. நான் எந்த வருடத்தில் இருந்து உத்தமபாளையம் குடியிருந்து வருகிறேன் என்றால் 2016 ல் இருந்து குடியிருந்து வருகிறேன். எனக்கும் போதுமணியின் மகளுக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் 2013 ல் நடந்து. நானும் எனது மனைவியும் உத்தம பாளையத்தில் ஒன்றாக ஏழு வருடம் குடியிருந்தோம். உத்தமபாளையத்தில் எனக்கு சொந்தமாக இடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி இடம் எந்த வருடத்தில் வாங்கினேன் என்றால் 2017–2018 ல் வாங்கினேன். மேற்படி இடத்தில் தற்போது வீடு கட்டி குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். 2019 ல் வீடு கட்டினேன். எவ்வளவு மதிப்பில் வீடு கட்டினேன் என்றால் 20 லட்சத்திற்கு வீடு கட்டினேன். எந்த வகையில் எனக்கு 20 லட்சம் பணம் கிடைத்தது என்றால் வீட்டு லோன் எடுத்திருந்தேன், பி.எப். லோன் எடுத்திருந்தேன். மேற்படி லோன்கள் தற்போது முடிந்து விட்டதா என்றால் இல்லை.

3. மேற்படி லோன்ஆவணங்களை தாக்கல் செய்ய தயாரா என்றால் தயார். எனக்கு SBI வங்கியில் கணக்கு உள்ளது. தாவா காசோலை என்னுடையது என்றால் சரிதான். காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் இல்லை. மேற்படி விபரத்தை வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை என்று பதிலறிவிப்பிலும், முதல் விசாரணையிலும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். காசோலை சம்பந்தமாக காவல்நிலையத்தில் எனது மனைவி மீது புகார் கொடுத்துள்ளேனா என்றால் புகார் கொடுத்துள்ளேன். மேற்படி புகார்மனு, மனுரசீதை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. காசோலை வசூலுக்கு தாக்கல் செய்தபோது வங்கியிலிருந்து எனக்கு குறுஞ்செய்தி அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் சொல்வதுபோல் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றும், வழக்கிற்காக காசோலை தொலைந்து விட்டது என்று புகார் கொடுத்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல.

4. பதிலறிவிப்பில் காசோலை புத்தகம் முழுவதையும் எனது மனைவி திருடி சென்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதில் ஒரு காசோலையை தான் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் . காசோலை புத்தகம் திருடு போனது சம்மந்தமாக வங்கிக்கு சென்று ஸ்டாப் பெமெண்ட் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் கையொப்பம் மாற்றுவது சம்பந்தமாக ஆவணங்கள் வங்கியில் உள்ளதா என்றால் உள்ளது. நான் சொல்வது போல் வங்கியில் கையொப்பத்தை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுத்திருந்தால் காசோலையில் கையொப்பம் மாறுதலாக உள்ளது என்று காரணம் குறிப்பிட்டு திருப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. காசோலை காணாமல் போன விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் வழக்கறிஞர் அறிவிப்பு வந்த பிறகு தெரியவந்தது. நானும், எனது மனைவியும் எத்தனை வருடமாக இருந்து வருகிறோம் என்றால் 3 வருடமாக பிரிந்துள்ளோம். எனக்கும், புகார்தாரருக்கும் பேச்சுவார்த்தை உள்ளதாக முதல்விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

5. 2018-2019 ல் வீடுகட்டுவதற்காக எனக்கு பணத்தேவை இருந்தது என்றும், அதனால் புகார்தாரரிடம் நான் ரூ10,00,000/- வாங்கினேன் என்றால் சரியல்ல. மேற்படி பணத்தை ஒருவருடத்தில் திருப்பி தருவதாக கூறி தற்போதுவரை இழுத்தடித்து வருகிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் பணம் கேட்டு என்னிடம் பிரச்சனை செய்தபோதுதான் 30.07.2025-ல் நான் காசோலையை கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரரிடம் வாங்கிய பணத்தை ஏமாற்றவேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யான எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. எனது மனைவி ஜீவனாம்சம் கேட்டு உத்தமபாளையம், நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கின் விசாரணையின்போது டாஸ்மாக் வருமானத்தை தவிர்த்து வேறு வருமானம் இல்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான்சட்டப்படியாக கொடுக்க வேண்டிய கடனுக்காக தாவா காசோலையை கொடுத்தேன் என்றால் சரியல்ல. காசோலை தொகையை கொடுக்க கடமைப்பட்டவர் என்றும், தண்டிக்கப்படவேண்டிய நபர் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.02 18:00:22 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam